**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO- 25/2020</u>**

**Dated :25.02.2026**

**Deposition of witness for : P.W.5**

**Additional Witness Examined as PW5 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **வனிதா** | வயது | : | 49 |
| தந்தை பெயர் | : | காளியப்பன் | தாலுகா | : | **காவல் ஆய்வாளர்** |
| கிராமம் | : | கந்தர்வக்கோட்டை | தொழில் | : | **கந்தர்வக்கோட்டை** |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிகளான உதவி ஆய்வாளர் திருமேனி மற்றும் காவல் ஆய்வாளர்கள் தினேஷ்குமார் மற்றும் சிங்காரவேல் ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் திருமேனி கடந்த 23.05.2019 ஆம் தேதியன்று கந்தர்வக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, கோவிலூர் மேல தெருவை சேர்ந்த குருசாமி மகன் நாகராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று, நிலைய குற்ற எண் 131/2019 சட்டப்பிரிவு 304-A இதச -ன் படி வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** பின்னர் வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் தினேஷ்குமார் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

2) அவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 23.05.2019 ஆம் தேதி, மதியம் 01.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் இளங்கோவன் மற்றும் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ. 5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) பின்னர் சாட்சிகள் நாகராஜ், செந்தில் குமார், பிச்சைக்கண்ணு, குணசேகரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இறந்து போன ராம்குமார் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் மதியம் 01.30 மணி முதல் 03.00 மணி வரை பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இறந்தவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக உதவி ஆய்வாளர் திருமேனி என்பவர் மூலமாக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் அளித்து, பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை அவரது உறவினர்களிடம் ஒப்படைக்க அறிவுறுத்தியுள்ளார். பின்னர் சாட்சிகள் முருகானந்தம், சரவணன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4) மேற்படி சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில், 07.06.2019 ஆம் தேதி மதியம் 01.00 மணியளவில் தாமாக நிலையம் ஆஜரான எதிரி ஆனந்த் என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் எதிரி ஆஜர் செய்த வழக்கு விபத்தை ஏற்படுத்திய TN 49 BH 9671 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZ என்ற இருசக்கர வாகனத்தையும் விபத்திற்குள்ளான TN 51 X 4075 என்ற பதிவெண் கொண்ட Hero Honda CD 100 என்ற இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் உதவி ஆய்வாளர் திருமேனி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் சிங்காரவேல் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

5) அவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 22.09.2019 ஆம் தேதி புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனம் மற்றும் விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்த, மோட்டார் வாகன ஆய்வாளர் செந்தாமரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்று வந்துள்ளார். ( **மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ. 8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**6)** பின்னர் அன்றைய தினமே, தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று இறந்து போன ராம்குமார் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் தமிழ்மணி என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வந்துள்ளார். **( மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7) பின்னர் இத்துடன் விசாரணை முடித்து வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக இதச பிரிவு 304( A)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். கந்தர்வக்கோட்டையில் இருந்து வேலாடிப்பட்டி செல்லும் சாலை கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் சாலை என்றால் சரிதான். நெப்புகை செல்லும் சாலை மேற்படி சாலையின் வடபுறம் உள்ளது என்றால் சரிதான். வேலாடிப்பட்டியில் இருந்து நெப்புகை செல்வதற்கு இடது புறத்தில் இருந்து, வலது புறமாக திரும்ப வேண்டும் என்றால் சரிதான். நெப்புகையில் இருந்து கந்தர்வக்கோட்டை வருவதற்கு நெப்புகை சாலையில் இருந்து, வலது புறம் திரும்ப வேண்டும் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் இருசக்கர வாகனங்கள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சதீஸ், ராசுக்கோனார் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

2) நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர், காவல் ஆய்வாளர் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நாள் நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

இறந்து போனவருக்கு நஷ்டஈடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.25 16:31:09 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**